மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : அந்தத் தீர்ப்பு சென்ற திங்களில்தான் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, 100 எக்கர் பரப்பளவு சேர்ந்தால்தான சொசைட்டி ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய தொகுதியில் குன்னம், ஆத்தூர் என்ற பகுதியில் 300 எக்கர் நிலத்தை ஒன்றாக இணைத்து ஒரு சொசைட்டி ஆரம்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் போட்டு இருக்கிறார்கள். அது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு மிகுந்த நாளாகிறது. அதற்கு அரசாங்கம் இன்னும் அனுமதி அளிக்காததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தனியாகக் கேள்வி போட்டால் சொல்ல முடியும். அது பரிசிலனையில் இருக்கும் என்று கருதுகிறேன்.

*Lift Irrigation Scheme at Pugalur*

* 236 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether Pugalur Lift Irrigation Scheme in Karur area has been sanctioned; and

(*b*) if so, the number of villages that will be benefited ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி :

(அ) ஆம்.

(இ) இதனால் பயன்பெறும் கிராமங்களின் எண்ணிக்கை 15 (பதினைந்து).

திரு என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, அந்தப் புதிய திட்டம் தெளிப்பான் முறையில் "ஸ்பிரிங்கிளிங் திட்டமாக" ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதா ? அதிக நாள் தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலில் பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு பாசனத்திற்கு என்று வைத்தால் பெருமளவு பரப்பளவிற்கு உபயோகப்படாது என்று கருதியதால், அதிக பரப்பளவிற்குத் தண்ணீர் அளிக்கிற வகையில் அதைத் தெளிப்பான் திட்டமாக இப்போது துவக்கி இருக்கிறார்கள். இது இப்போதுதான் சாங்ஷன் ஆகியிருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு எஸ். நல்லசாமி: தலைவர் அவர்களே, புகளூர் ஏரியாவில் இருக்கக் கூடிய தெளிப்பான் முறை திட்டம் ஆரம்பித்து எவ்வளவு நாள் ஆகிறது? அதற்காகப் பொறியாளர் அமைத்து எத்தனை வருஷம் ஆகிறது? அட்மினிஸ்டிரேஷன் ஆரம்பித்து எவ்வளவு வருஷம் ஆகிறது? இதையெல்லாம் ரெவியூ பண்ணி எவ்வளவு வேலை நடந்திருக்கிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா? அதோடு தெளிப்பான் முறையை அந்தப் பகுதி மக்கள் வரவேற்கின்றார்களா அல்லது கோவபரேஷன் டிபார்ட்மெண்டினால் திணிக்கப்பட்டிருக்கிறதா? இதைப் பற்றி பரிசீலனை செய்திருக்கிறார்களா என்பதை அரசு ஆராய்ந்திருக்கிறதா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு எத்தனை ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது தெளிப்பான் முறையில்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை கேள்விகள் ஒரே நேரத்தில் கேட்பது?

திரு எஸ். நல்லசாமி: இது எங்கள் பிரச்னை. அந்தக் கடன் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விகிதாச்சாரம் வருகிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா? அதோடு தெளிப்பான் முறையை உபயோகப்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு ஏதாவது மானியம் வழங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: இந்தத் திட்டத்தின் கீழ் 1—10—1972-ல் ஐந்து திட்டங்கள் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. இது ஆரம்பமானது நவம்பர் 1968-ல், தெளிப்பான் முறையை அந்தப் பகுதியில் பயன்படுத்தினால் நலமாக இருக்கும். தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடந்த இப்படிப்பட்ட பகுதிக்கு காவேரித் தண்ணீரை வாய்க்கால்மூலம் கொண்டு வந்தால் தண்ணீர் உறிஞ்சிப் போய்விடும். ஆகவே, தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு அந்தப் பகுதியில் தெளிப்பான் முறையில் செய்யலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான என்ஜினியர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு நம்முடைய மாநில சர்க்கார் ஊக்குவிப்பதற்காக சர்க்கார் பணத்தைக் கொடுத்து அவர்களை முதலில் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். முதலாவதாக கிட்டத்தட்ட 7 அதிகாரிகளை இலவசமாகக் கொடுத்து அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கின்ற வகையில் அந்தத் திட்டத்தில் பணி புரிவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுது கிட்டத்தட்ட ஐந்து திட்டங்களில் வேலைகள் முக்கால்வாசி நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: இந்தப் புகளூர் கூட்டு இறைவைப் பாசனத்திற்கு மொத்தம் எத்தனை ஏக்கர் திட்டமிடப்பட்டுள்ளது? எவ்வளவு ரூபாய் கடன் தரப்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு மன்னை. ப. நாராயணசாமி: மொத்தம் 3,679 ஏக்கருக்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதன்மூலம் பாசனத்திற்காக தெளிப்பான் முறையில் கிட்டத்தட்ட 10,000 ஏக்கருக்குச் சரியாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது.

1971 சனவரி 29]

திரு எம். சுரேந்திரன் : தெளிப்பான் முறை சில நாட்களுக்கு முன்னால் சர்க்கார் பண்ணையில் காய்கறி பயிர் செய்வதற்காக கையாளப்பட்டு வந்தது. தெளிப்பான் முறையில் காய்கறிகள் உற்பத்தியாகவில்லை என்று முறையில் பேசப்பட்டது. இப்பொழுது அந்த முறை அங்கேயிருந்து கைவிடப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். தெளிப்பான் முறை எவ்வளவு தூரம் பயன் அளிக்கிறது, அதற்கு எவ்வளவு தூரம் செலவழிக்கலாம் என்று மதிப்பிட்டு, கணக்கிட்டு இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தெளிப்பான் முறை திருச்சி, புதுக்கோட்டை பகுதியிலுள்ள அண்ணா பண்ணையில் கையாளப்பட்டு, துவரை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு நல்ல பலன் தருகிறது என்பதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். ஆகவே இது பலன் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் புதிய வீட்டு வசதித் திட்டங்கள்.

*237 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் வீட்டு வசதியினைப் பெருக்க, திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தஞ்சை திருச்சி மாவட்டங்களில் வீட்டு வசதியினைப் பெருக்க, நடப்பாண்டில் ரூ. 10.39 இலட்சம் செலவில் திட்டங்கள் உள்ளன.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சியில் மத்திய பகுதியிலே மத்திய அரசுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதை அவர்கள் உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலங்களை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்று அங்கே வீட்டுவசதி வாரியத்தினுடைய வேலைகளைப் பெருக்குவதற்கான திட்டம் இருக்கிறதா? அதிலும் லோ காஸ்டு ஸ்கீமின் கீழ் அவர்களுக்கு வசதியாக இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : பாதுகாப்புத் துறைக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள் ஏராளமாக திருச்சி மையப் பகுதியிலே இருக்கின்றன. வீட்டு வசதி வாரியம் இவைகளை வாங்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. நமக்கு கிடைத்த பிறகு, அதை யாருக்குக் கொடுப்பது என்பது தீர்மானிக்கப்படும்.